தினமணி

# இன்றைய வேளாண் செய்திகள்

## தமிழக கடலோர மாவட்டங்களில் இன்று மழை பெய்யும்: வானிலை அறிவிப்பு




குமரிக்கடல் பகுதியில் நிலைக்கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக தென்மாவட்டங்களில் அநேக இடங்களில் மழைபெய்யும் என்று வானிலை மையம் அறிவித்துள்ளது. மேலும் இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் வங்கக்கடலின் தென்மேற்கு பகுதியில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை மெல்ல நகர்ந்து தற்போது குமரிக்கடல் பகுதியில் நிலைக் கொண்டுள்ளது. இதன்காரணமாக, தென்மாவட்டங்களின் அநேக இடங்களிலும், வட மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் இன்று (வெள்ளிக்கிழமை) மழைபெய்யும். அதேசமயத்தில் தென்மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவும் வாய்ப்பு இருக்கிறது. மேலும் கடலோர மாவட்டங்களில் அவ்வப்போது தரைக்காற்று பலமாக வீசும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் யூரியா விநியோகம்

தண்டராம்பட்டு உழவர் பணி கூட்டுறவு சங்கத்தில் தமிழக அரசின் மானிய விலையில் யூரியா வழங்கும் நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது. கூட்டுறவு சங்கத் தலைவர் வித்யா தேவேந்திரன், செயலாளர் கோ.கருணாகரன், காசாளர் ரகுபதி மற்றும் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். தண்டராம்பட்டு, அமைந்தபுத்தூர், ரோடு பாளையம், தென்முடியனூர், நெல்லிக்குப்பம்,

டி.கிருஷ்ணாபுரம், அல்லப்பனூர், தரடாப்பட்டு, கன்னக்கந்தல், கீழ்ராவந்தவாடி, நாலாள்பள்ளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் யூரியா மூட்டைகளைப் பெற்றுச் சென்றனர்.

## கோழிப் பண்ணைத் தொழிலில் ஆண்டுக்கு 8-15 சதவீத வளர்ச்சி

கோழிப் பண்ணைத் தொழிலில் ஆண்டுக்கு 8 முதல் 15 சதவீத வளர்ச்சி உள்ளதாக கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டி.கே.எம். சின்னையா தெரிவித்தார். இந்திய கோழியின அறிவியல் கழகத்தின் 31-ஆவது ஆண்டு மாநாடு, சர்வதேச வர்த்தகத்துக்கான கோழியின உற்பத்தி என்ற தலைப்பில் தேசியக் கருத்தரங்கு தொடக்க நிகழ்ச்சி நாமக்கல்லில் வியாழக்கிழமை நடைபெற்றது. மாநாட்டு மலரை வெளியிட்டு அமைச்சர் டி.கே.எம்.சின்னையா பேசியது: வேளாண் தொழிலில் கோழி வளர்ப்பு முன்னோடித் தொழிலாக உருவெடுத்துள்ளது. வீரிய ரக இறைச்சி, முட்டை, நாட்டுக் கோழி வளர்ப்புத் தொழில்கள் பிரபலமடைந்து வருகின்றன. கோழிப் பண்ணைத் தொழில் ஆண்டுக்கு 8 முதல் 15 சதவீதம் வளர்ச்சியடைந்துவரும் நிலையில், வேளாண் தொழில் 1.5 முதல் 2 சதவீதம் மட்டுமே வளர்ச்சி அடைகிறது. 2011-2012-ஆம் ஆண்டில் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கால்நடைப் பொருள்களின் மொத்த மதிப்பு ரூ.4.59 லட்சம் கோடி. இதில் கோழி இறைச்சி மூலம் ரூ.36 ஆயிரத்து 123 கோடி, முட்டை மூலம் ரூ.17 ஆயிரத்து 803 கோடி வருவாய் ஈட்டப்பட்டது. 2013-2014-ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த முட்டை 73.43 பில்லியன். இதில் தமிழகத்தின் பங்கு 14.2 பில்லியன். நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மொத்த இறைச்சி 6.23 மில்லியன் டன். இதில் தமிழகத்தின் பங்கு 0.33 மில்லியன் டன். நாட்டில் தனி மனிதனுக்கு கிடைக்கும் முட்டையின் எண்ணிக்கை ஆண்டுக்கு 55. தமிழகத்தில் தனி மனிதனுக்குக் கிடைக்கும் முட்டையின் எண்ணிக்கை 164. தமிழகம் கோழி இறைச்சி, முட்டை உற்பத்தியில் 2-

வது இடத்தில் உள்ளது. பின்தங்கிய மாவட்டங்களில் கோழி வளர்ப்பைப் பிரபலப்படுத்த ரூ.22.35 கோடி செலவில் திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், விழுப்புரம், கடலூர், அரியலூர், பெரம்பலூர், சிவகங்கை, வேலூர் உள்ளிட்ட 16 மாவட்டங்களில் நாட்டுக்கோழி வளர்ப்பு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்றார் அமைச்சர் சின்னையா. மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி, இந்திய கோழியின அறிவியல் கழகத் தலைவர் இரா.பிரபாகரன், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி, ஆராய்ச்சி நிலைய முதல்வர் எ.துரைசாமி, எம்எல்ஏக்கள் கேபிபி.பாஸ்கர், உ.தனியரசு, ஆர்.சாந்தி, நகர்மன்றத் தலைவர் இரா.கரிகாலன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>நாமக்கல்லில் ரூ.28 லட்சம் பருத்தி ஏலம்</u>**

நாமக்கல் : நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின், குடோனில் பருத்தி ஏலம் நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப் பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 1,400 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.டி.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,580, குறைந்தபட்சமாக, 4,806 ரூபாய், ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,444, குறைந்த பட்சமாக, 4,161 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 28 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது.பல்வேறு பகுதியைச் சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

## கோழிக்கொண்டை பூக்கள் விளைச்சல் அமோகம்

பள்ளிபாளையம்: கோழிக் கொண்டை பூ சாகுபடிபரப்பு அதிகரித்துள்ள தால், அதன் விளைச்சல் நடப்பாண்டு, பள்ளிபாளையம் பகுதியில் அமோகமாக இருக்கிறது. பள்ளிபாளையம் அடுத்த, கொக்கராயன்பேட்டை பகுதியில், கோழிக்கொண்டை பூக்கள் சாகுபடி செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். குறைந்த முதலீட்டில், கோழிக்கோண்டை பூ சாகுபடி செய்து, குறைந்த காலத்தில் பூ அறுவடை செய்ய முடிகிறது. பூ அறுவடை செய்ய துவங்கிய காலம் முதல், அதிகபட்சமாக தொடர்ந்து, ஆறு மாதங்களுக்கு மேலாக, தினமும் அறுவடை செய்ய முடியும்.ஒரு நாளைக்கு, ஒருவர், 20 கிலோ வரை, பூக்களை பறிக்கலாம். பள்ளிபாளையம் பகுதியில் இருந்து, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு, கிலோ, 60 ரூபாய் என்ற விலையில், பூக்கள் விற்கப்படுகிறது. குறைந்த செலவில், அதிக சாகுபடி செய்வதால், விவசாயிகள் அதிக லாபம் அடைகின்றனர். இப்பகுதியில், 30க்கும் மேற்பட்ட ஏக்கரில், கோழிக்கொண்டை பூ சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

## மிதமான மழை பெய்வதால் துவரை விவசாயிகள் மகிழ்ச்சி

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் தாலுகா சுற்று வட்டார பகுதியில், நேற்று முன்தினம் முதல் மிதமான மழை பெய்து வருவதால், துவரை சாகுபடி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுக்காவுக்கு உட்பட்ட பகுதிகளான சேங்கல், முனையனூர், பஞ்சப்பட்டி, பழையஜெயங்கொண்டம், புதுப்பட்டி, குழந்தைப்பட்டி, திருமேனியூர், பாப்பக்காபட்டி, ஆகிய பகுதிகளில் மானாவரி சாகுபடியில், 1,500க்கும் மேற்பட்ட ஏக்கரில் துவரை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் முதல், இந்தப் பகுதிகளில் மழை பெய்து வருகிறது. துவரை செடி வளர்ச்சி அடைவதற்கும், பூக்கள்

பிடிப்பதற்கும் சரியான நேரத்தில் மழை பெய்வதால், விவசாயிகள் எதிர்பார்த்த அளவை விட, மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. கரூர் மாவட்டம் முழுவதும் நேற்று மேமூட்டம் காணப்பட்டது. காலை, 7 மணி முதல் பரவலாக லேசான மழை பெய்தது. கரூர் மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் பயிரிட்டுள்ள நெல், கரும்பு, வாழை, கம்பு, சோளம், ராகி போன்றவை நன்கு வளர்வதுடன் அதிக மகசூல் கிடைக்கும், என்று விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

**விவசாயிகள் நவீன தொழில்நுட்பம் மூலம் வெண்பட்டு உற்பத்தியில் லாபம் பெறலாம்; கருத்தரங்கில் தகவல்**

பழநி : திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் நவீன தொழில்நுட்பத்தில் பட்டுபுழு வளர்த்து அதிக லாபம் பெறமுடியும் என கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்தார். மத்திய பட்டுவாரியம், மாநில பட்டுவளர்ச்சிதுறை சார்பில் பழநியில் தரமான வெண்பட்டு உற்பத்திக்கான விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது. கலெக்டர் வெங்கடாசலம் தலைமைவகித்தார். பட்டுவளர்ச்சிதுறை இயக்குனர் செந்தில்குமார் முன்னிலைவகித்தார். கலெக்டர் பேசுகையில்," திண்டுக்கல் மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால் மாற்று தொழிலாக விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பட்டுப்புழு வளர்த்து அதிக லாபம் பெறமுடியும். இதற்காக ஏற்கனவே திண்டுகல்லில் கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது. மாவட்டத்தில் பட்டுபுழு வளர்ப்பு தொழிலில் பழநி, ஒட்டன்சத்திரத்தில் 54 சதவீதம்பேர் ஈடுபட்டுள்ளனர். மத்திய, மாநில பட்டுவளர்ச்சிதுறைசார்பில் மல்பேரி செடி வளர்க்கவும், சொட்டுநீர்பாசனம், கூடாரம் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. இதற்காக சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. கருத்தரங்கில் சொல்லப்படும் தொழில் நுட்பங்களை பயன்படுத்தினால் 90 சதவீத அறுவடை பயன் கிடைக்கும்,'என்றார். மதுரை பட்டுவளர்ச்சி துறை மண்டல துணை இயக்குனர் யோகமாலா, உடுமலை பட்டு

ஆராய்ச்சி விரிவாக்க மைய விஞ்ஞானி புனிதவதி, திண்டுக்கல் உதவி இயக்குனர் சச்சிதானந்தம் பங்கேற்றனர்.

## கமுதியில் கனமழை

ராமநாதபுரம் : ராமநாதபுரம் மாவட்டத்தில் நேற்று காலை 8:00 மணி நிலவரப்படி அதிகபட்சமாக கமுதியில் 73 மி.மீ., மழை பெய்துள்ளது. மற்ற இடங்களில் பெய்த மழையளவுகள்: ராமேஸ்வரம்-32, தங்கச்சி மடம்- 26, பள்ளமோர்குளம்-24, முதுகுளத்தூர்-24, தீர்த்தாண்டதானம்-22, பாம்பன்- 21.10, மண்டபம்-19, திருவாடானை-18.40, தொண்டி-16.40, ஆர்.எஸ்.மங்கலம்-16, வாலிநோக்கம்-15.50, கடலாடி-15, வட்டாணம்- 5 மி.மீ., மழை பெய்துள்ளது. சராசரியாக 22.36 மி.மீ.,யும், மாவட்டத்தில் மொத்தம் 357.70 மி.மீ.,யும் மழை பெய்துள்ளது.

## பொங்கல் பண்டிகைக்கு மஞ்சள் கொத்து அமோகம்! கிராமங்களில் அதிக விளைச்சல்

சிவகங்கை : பொங்கல் பண்டிகைக்கு தேவையான மஞ்சள் கொத்து சிவகங்கையில் நன்கு விளைந்துள்ளது. பொங்கலுக்கு தேவையான கரும்பு விளைச்சல் சிவகங்கை, இடையமேலூர், கூட்டுறவுபட்டி உள்ளிட்ட இடங்களில் இந்த ஆண்டு அதிகமாக விளைந்துள்ளது. தற்போதே கரும்புகள் பிற மாநிலங்களுக்கு லாரிகளில் அனுப்பப் படுகின்றன. மஞ்சள் கொத்து: அடுத்து பொங்கல் பானையில் கட்டுவதற்காக, பூஜையில் வைக்கப்படும் மற்றொரு பொருள் மஞ்சள் கொத்து. இந்த மஞ்சள் சாலூர், கூட்டுறவுபட்டி,மலம்பட்டி, உசிலம்பட்டி, இடையமேலூர் உள்ளிட்ட சுற்றுப்புற கிராமங்களில் நன்கு விளைந்துள்ளது. பொங்கல் விற்பனைக்காக மஞ்சள் கொத்து செடிகளை அறுவடை செய்ய விவசாயிகள் தயார் நிலையில் உள்ளனர். சாலூர் விவசாயி பி.போஸ் கூறுகையில்," ஏக்கருக்கு 30 ஆயிரம் மஞ்சள் செடி வரை நடவு செய்யலாம். ஆறு மாத பராமரிப்பிற்கு பின், நன்கு விளைந்த

மஞ்சள் கொத்துகளை செடிகளுடன் பறித்து, வியாபாரிகள் மூலம் பொங்கல் பண்டிகை விற்பனைக்கு அனுப்புவோம். ஒரு மஞ்சள் கொத்திற்கு ரூ.20 வீதம் கிடைத்தால் தான் லாபம் உண்டு. இல்லாவிடில் விவசாயிகளுக்கு இழப்பு தான் மிஞ்சும். காய்கறி, கரும்பு, கீரை வகைகளை நடவு செய்யும் போது, துணை விவசாயமாக மஞ்சள் செடி கொத்து பயிரிடுகிறோம். இது சில்லரை செலவுக்கான வருமானமாகும்," என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### உருளைக்கிழங்கு உற்பத்தியில் டாப்-10



புதுடெல்லி: இந்தியாவில் உருளைக்கிழங்கு உற்பத்தியில் முன்னிலையில் உள்ள முதல் பத்து மாநிலங்கள் (டாப்-10) வருமாறு: 1.உத்தரபிரதேசம் - 15,013 டன், 2.மேற்கு வங்கம் - 12,000 டன், 3.பீகார் - 6,536 டன், 4.மத்திய பிரதேசம் - 2,322 டன், 5.குஜராத் - 2,300 டன், 6.பஞ்சாப் - 2,180 டன், 7.அஸ்ஸாம் - 995.09 டன், 8.கர்நாடகம் - 730.20 டன், 9. அரியானா - 712.80 டன், 10. ஜார்கண்ட் - 653.12 டன் அளவிற்கு 2013-2014ம் ஆண்டில் உற்பத்தி செய்துள்ளது. இது, எதிர்பார்ப்பு மதிப்பீட்டின்படி 46,394.83 டன் அளவிற்கு எட்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. கடந்த 2012-2013ம் ஆண்டில் மட்டும் இந்த 10 மாநிலங்களில் 44,726.22 டன் உருளைக்கிழங்கு சாகுபடியாகியுள்ளது என்றும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

## தேயிலை விற்பனை அமோகம்



கோவை:கோவையில் நடந்த தேயிலைத்தூள் ஏலத்தில் உள்ளூர் ரகம்(டஸ்ட்) 3.29 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 2.74 லட்சம் கிலோ விற்பனையானது. சராசரியாக ஒரு கிலோ ரூ.77.45க்கு விற்றது. மொத்தம் விற்பனை மதிப்பு ரூ.2.13 கோடியாகும். ஏற்றுமதி ரகம்(லீப்) 1.72 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 1.28 லட்சம் கிலோ விற்பனையானது. சராசரியாக ஒரு கிலோ ரூ.68.80க்கு ஏலம் போனது. ரூ.88 லட்சத்திற்கு வர்த்தகம் நடந்தது. கடந்த வார விற்பனையோடு ஒப்பிடுகையில், 'உள்ளூர் ரகம் கிலோவுக்கு 5 பைசா அதிகரித்துள்ளது. ஏற்றுமதி ரகம் ரூ.1.79 குறைந்துள்ளது. மொத்தத்தில் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி ரக தேயிலைத்தூள் இந்த வாரம் ரூ.3.01 கோடிக்கு விற்றுள்ளது. இது கடந்த வாரம் விற்றதை விட ரூ.46 லட்சம் அதிகமாகும். விற்பனை அதிகரித்ததால் வர்த்தகர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## 3 மாநிலங்களில் மணக்கும் சூளகிரி கொத்தமல்லி, புதினா

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒசூர், தளி, தேன்கனிக் கோட்டை மற்றும் சூளகிரி உள் ளிட்ட பகுதிகள் எப்போதும் குளிர்ந்த சீதோஷ்ண நிலை யில் காணப்படும். சூளகிரி பகுதியில் ஆண்டு முழுவதும் உள்ள குளிர்ந்த சீதோஷ்ண நிலை காரணமாக, காய்கறி கள் விளைச்சல் அமோகமாக உள் ளது. கொத்தமல்லி, புதினாவில் நீர்ச்சத்து புரதம், கொழுப்பு, கார்போஹைடி ரேட், நார்ப் பொருள் உலோகச் சத்துக்கள் பாஸ்பரஸ், கால்சியம், இரும்புச் சத்துக்களும் வைட்டமின் ஏ நிக்கோட்டினிக் ஆசிட் ரிபோ மினேவின் தயாமின் ஆகிய சத்துக்களும்

அடங்கியுள்ளன. புதினாக்கீரை யைத் துவையலா கவோ சட்னி யாகவோ பயன் படுத்தினால் புதினாவின் பொதுக் குணங்கள் அனைத்தும் எளிதில் கிடைத்து விடுகிறது. 50 வகையான நோய்களுக்கு மருந்தாக பயன்படுத்தப்படுகிறது. அதே போல் கொத்தமல்லியிலும் அதிக அளவு மருத்துவ குண ங்கள் உள்ளது. இவ்வாறு மருத்துவ குணம் மற்றும் மாமிச உணவில் முக்கிய இடம் வகிக்கும் புதினா, கொத்தமல்லி, கீரை வகைகள் சூளகிரி சுற்றுவட்டார பகுதிகளான சாமனப்பள்ளி, ஏனு சோனை, பெண்டிகானப் பள்ளி, கிருஷ்ணன் பாளையம் உள்ளிட்ட பல கிராமங்களில் அதிக அளவு விளைவிக்கப்படுகிறது. மேலும் சூளகிரி சந்தைக்கு கொண்டு வரப்பட்டு, தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் வேன்கள் மூலம் அனுப்பி வருகின்றனர். அதே நேரத்தில், கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களி லிருந்து வியாபாரிகள் நேரடியாக வந்து கொள்முதல் செய்தும் செல்கின்றனர். நாள் ஒன்றுக்கு சுமார் 10 டன் வரை கொத்த மல்லியும், புதினா வகைகளும் ஏற்றுமதி செய்யப் படுகிறது. தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி பெரிய அளவில் இருந்த இந்த சந்தை, சாலை விரிவாக்க பணியால் தற்போது சுருங்கி போயுள்ளது. காய்கறிகள் விற்பனை மற்றும் ஏற்றுமதி செய்ய நிரந்தரமாக சந்தைக்கு ஒரு இடம் வேண்டும் என்பதே விவசாயிகளின் கோரிக்கை யாக உள்ளது.

## **<u>விவசாயிகளுக்கு மானியத்தில் வேளாண் கருவி விண்ணப்பிக்க கலெக்டர் வேண்டுகோள்</u>**

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் மானியத்தில் வேளாண் கருவிகள் பெற விவசாயிகள் விண்ணப்பிக்க கேட்டு கொள்ளப்பட்டுள்ளது. வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் 2014-15ம் நிதியாண்டில் சிறு, குறு, மகளிர் மற்றும் பெரிய விவசாயிகள், தாழ்த்தப்பட்ட பிரிவு விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள், வேளாண் இயந்திரங்கள் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்

பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பல்வகை பயிர் கதிரடிக்கும் இயந்திரம், விசை களையெடுக்கும் கருவி, கைத்தெளிப்பான்கள், இயந்திரத்தினால் இயக்கப்படும் தெளிப்பான்கள், மனித சக்தியால் இயங்க கூடிய கருவிகள், குழிபோடும் கருவி, வேளாண் கழிவுகளை தூளாக்கும் கருவி, நெல் வைக்கோல் கட்டும் கருவி போன்ற பல்வேறு கருவிகள் சிறு, குறு, பெண் மற்றும் தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு 50 சதவீத மானியத்திலும், பெரிய விவசாயிகளுக்கு 40 சதவீத மானியத்திலும் வழங்கப்படுகிறது. இதர பிரிவினருக்கு 257 கருவிகளுக்கு ரூ.96.70 லட்சமும், தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு 12 கருவிகளுக்கு ரூ.4.71 லட்சமும் மானியமாக வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாய நிலங்களுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் வேளாண் கருவிகள் தேவைப்பட்டால் ஈரோடு வருவாய் கோட்டத்திற்குட்பட்ட விவசாயிகள் ஈரோடு பிரப் ரோட்டில உள்ள உதவி செயற் பொறியாளர் அலுவலகத்தையும், கோபி வருவ £ய் கோட்டத்திற்குட்பட்ட விவசாயிகள் கோபி தெற்கு பார்க் வீதியில் உள்ள உதவி செயற்பொறியா ளர் அலுவலகத்தையும் அணுகலாம். விவசாயிகளுக்கான மானியம் முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் வழங்கிட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. விவசாயிகள், சம்பந்தப்பட்ட அலுவலகங் களை அணுகி விண்ணப்பித்து தங்களுக்கு தேவையான கருவிகளை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலமாக பெற்று பயன் பெற கலெக்டர் பிரபாகரன் கேட்டு கொண்டுள்ளார்.

## <u>பருத்தி விலை அதிகரிப்பு ரூ.18.23 லட்சத்துக்கு ஏலம்</u>

அனுப்பர்பாளையம், :அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் பருத்தி ஏல வர்த்தகம் நடைபெற்று வருகின்றது. நேற்று மொத்தம் ரூ.18.23 லட்சத்துக்கு பருத்தி ஏலம் போனது. நேற்று நடைபெற்ற ஏலத்துக்கு 1121 பருத்தி மூட்டைகள் வந்திருந்தது. பருத்தி சீசன் மீண்டும் துவங்கியதால், சென்ற

வாரத்தைவிட பருத்தி வரத்து 350 மூட்டைகள் அதிகரித்திருந்தது. மேலும் சென்ற வாரத்தைவிட டி.சி.எச். ரகப்பருத்தி குவிண்டாலுக்கு ரூ.400 வரை பருத்தி விலை அதிகரித்தது. அதாவது குவிண்டால் விலை ரூ.5 ஆயிரத்தையும் தாண்டியது. டிசிஎச் ரகப்பருத்திக்கு அவிநாசியில் நல்ல கிராக்கி இருந்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். ஏலத்தில், டி.சி.எச். ரகப்பருத்தி ரூ.4500 முதல் 5035 வரையிலும், ஆர்.சி. எச் ரகப்பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3800 முதல் ரூ.4420 வரையிலும், மட்டரகப் பருத்தி ரூ.1600 முதல் ரூ.1800 வரையிலும் ஏலம் போனது. எல்.ஆர்.ஏ. ரகப்பருத்தி வரத்து இல்லை. ஏலத்தின் மொத்த மதிப்பு ரூ.18.23 லட்சம் ஆகும். கோபி, நம்பியூர், கிணத்துக்கடவு, குன்னத்தூர், செங்கப்பள்ளி, தர்மபுரி, கொள்ளேகால், நொக்கனூர், ஆத்தூர் பகுதிகளிலிருந்து 211 விவசாயிகளும், 11 பருத்தி வியாபாரிகளும் ஏலத்தில் பங்கேற்றனர்.

## <u>பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு</u>

ஈரோடு, : பவானிசாகர் அணையின் மொத்த கொள்ளளவு 120 அடி.இதில் 105 அடி வரை தண்ணீர் தேக்கி வைக்கப்படுகிறது. கடந்த ஆண்டு கடும் வறட்சியால் நீர்வரத்து குறைந்து கீழ்பவானி, தடப்பள்ளி-அரக்கன் கோட்டை, காலிங்கராயன் வாய்க்காலில் இரண்டாம் போக பாசனத்துக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இந்த ஆண்டு பரவலாக மழை பெய்துள்ளதால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து நீர் இருப்பு ஓரளவு அதிகமாக இருப்பது விவசாயிகளிடம் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. நேற்று முன்தினம் அணைக்கு 1405 கனஅடி வீதம் மட்டுமே நீர்வரத்து இருந்த நிலையில், நேற்று மேலும் நீர்வரத்து அதிகரித்து காணப்பட்டது. நேற்று 2500 கனஅடி வீதம் நீர்வரத்து இருந்தது. அதே சமயம் அணையில் இருந்து காலிங்கராயன் வாய்க்கால் பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்கு 600 கனஅடியும், கீழ்பவானி வாய்க்காலில் 1800 கனஅடி

வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. நேற்று மாலை அணையின் நீர்மட்டம் 84.80 அடியாக இருந்தது. அணையில் 18.3 டிஎம்சி., நீர் இருப்பு உள்ளது.

## வாழை மரங்களை தாக்கும் பனாமா வாடல் நோய்

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள், கரும்பு, வாழை, நெல் உள்ளிட்டவை அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகின்றது. இதில் வாழை சாகுபடி மட்டும் 5250 ஹெக்டர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பவானிசாகர், கோபி, சத்தி, டிஎன்.பாளையம், பெருந்துறை, அம்மாபேட்டை மொடக்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளில் கதலி, செவ்வாழை, நேந்திரன், கிரான்ட்ரைன், மொந்தன், ரஸ்தாளி, பூவன் உள்ளிட்ட ரகங்கள் அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளன. இந்நிலையில் கதலி, ரஸ்தாளி உள்ளிட்ட ரகங்களுக்கு நல்ல விலை கிடைத்து வரும் நிலையில், தற்போது வாடல் நோய் மற்றும் இலைப்புள்ளி நோய் கடுமையாக தாக்கி வருகின்றது. இந்நோய் தாக்குதலினால் வாழை கன்றுகளில் குருத்து விரியாமல் வாடி விடுகின்றது. பின்னர் சில நாட்களில் மரங்கள் காய்ந்து விடுகின்றது. இதனால் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக வாழை விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: ரஸ்தாளி, கதலி, மொந்தன் உள்ளிட்ட ரகங்களுக்கு நல்ல விலை கிடைத்து வருகின்றது. கடந்த காலங்களில் கடும் வறட்சி நிலவியதால் சரிவர வாழை சாகு படி செய்ய முடியவில்லை. இந்த ஆண்டு மழை பெய்து வறட்சி நீங்கி வாழை பயிரிட்டுள்ளோம். ஆனால், நோய் தாக்குதல் ஏற்பட்டு மரங்கள் காய தொடங்கி உள்ளது. குறிப்பாக 5 மாதங்கள் ஆகின்ற மரங்கள் தான் அதிகம் பாதிக்கப்படுகின்றது. 5 மாதங்கள் வாழையை காப்பாற்ற அதிக செலவு செய்துள்ளோம். பலன் கொடுக்கின்ற சமயத்தில் மரம் காய தொடங்குவதால் கடுமையான நஷ்டத்தை சந்திக்க வேண்டி உள்ளது.

ஊசிகள் மூலம் மருந்துகளை செலுத்தினாலும் பயன் இல்லை. ஏற்கனவே கடந்த சில மாதங்களுக்கு முன்பு பலத்த சூறை காற்று வீசியதால் வாழை மரங்கள் சாய்ந்து நஷ்டத்தை சந்தித்தோம். தற்போது இரண்டாவது முறையாக நோய் தாக்குதல் மூலமாக நஷ்டத்தை சந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. வேளாண்துறையினர் ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நஷ்ட ஈடு பெற்று கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு விவசாயிகள் கூறினர். இதுகுறித்து வேளாண் துறை அதிகாரிகள் கூறுகையில், பனாமா வாடல் நோயினை கட்டுப்படுத்த முதலில் பாதிக்கப்பட்ட வாழை இழைகளை அகற்றி அழித்து விட வேண்டும். கார்பென்டாசிம், மேன்கோசெப், குளோரோதலோனில் இவற்றில் ஏதாவது ஒரு டிபால் அல்லது சான்டோவிட் தண்ணீரில் கலந்து தெளித்து நோயை கட்டுப்படுத்தலாம் என்றனர்.

## <u>கண்வலிக்கிழங்கில் கரும்பூஞ்சான நோயை கட்டுப்படுத்துவது எப்படி? தோட்டக்கலை அதிகாரி விளக்கம்</u>

கரூர்,: கண் வலிக்கிழங்கில் இலைக்கருகல் மற்றும் கரும்பூஞ்ஞான நோய் தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து தோட்டக்கலை துறை அதிகாரி விளக்கமளித்துள்ளார். இது குறித்து தெரிவித்துள்ளதாவது: கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி தாலுகாவில் 750 எக்டேரில் கண் வலிக்கிழக்கு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது நிலவும் பருவ நிலையில் இலைக் கருகல் மற்றும் கரும்பூஞ்ஞான நோய் தென்படுகிறது. இந்த நோயினை கட்டுப்படுத்திட பயிர் பாதுகாப்பு மருந்துகளை தெளிக்க வேண்டும். ஒரு கிலோ ஒரு ஏக்கருக்கு என்ற அளவில் 200 லிட்டர் நீரில் சூடோமோனாஸ் புளோரன்ஸ்ஸை கலந்து தெளிக்க வேண்டும். வேறு எந்த உரத்திடனோ, மருந்திடனோ கலந்து தெளிக்க கூடாது. கார்பன்டிசத்தை ஒரு கிராம் ஒரு லிட்டர் நீர் என்ற அளவில் கலந்து தெளிக்கலாம் (ஒரு வார இடைவெளியில் 2 முறை). கார்பன்டிசம் பிளஸ் மேங்கோ செப் 63ஐ 2 கிராம், ஒரு லிட்டர் நீர் என்ற அளவில் கலந்து

தெளிக்கலாம். தற்போது பூக்கும் நிலையில் கண்வலிக்கிழங்கு பயிர் இருப்பதால் முடிந்த வரை விசைத்தெளிப்பானுக்கு பதிலாக கைத்தெளிப்பானை உபயோகிக்க வேண்டும். மேலும், விபரங்களுக்கு பகுதியில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநரை அணுகி தெரிந்து கொள்ளலாம்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அமராவதி அணையில் நீர் இருப்பு நெல், கரும்பு சாகுபடியில் விவசாயிகள் மும்முரம்**

கரூர், : அமராவதி அணையில் நீர் இருப்பதால் விவசாயிகள் நெல், கரும்பு நடவு முன்பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழையினால் அணை நிரம்பி வந்த காலங்களில் முப்போகம் கரூர் மாவட்டத்தில் சாகுபடியானது. பருவ மழை பொய்த்ததன் காரணமாக அமராவதி அணைக்கு நீர்வரத்து குறைந்துவிட்டது. இதனால் அணை நிரம்புவதும், கரூர் மாவட்டத்திற்கு ஆற்றில் தண்ணீர் வருவதும் எப்போதாவது நடைபெறும் நிகழ்வாக மாறிவிட்டது. மேலும் கரூர் மாவட்டத்திற்கு உரிய நீர்உரிமையும் கடந்த சில ஆண்டுகளாக மறுக்கப்பட்டு வருகிறது என விவசாயிகள் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றனர். இந்த ஆண்டு தென் மேற்கு பருவமழை போதிய அளவு கைகொடுக்கவில்லை. இதனால் வேளாண் பணிகளை மேற்கொள்ளவில்லை. சோளம், அவுரி செடி போன்றவைகளை மட்டும் பயிரிடப்பட்டது. இந்நிலையில் வடகிழக்கு பருவ மழை காரணமாக அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் நல்ல மழை பெய்தது. கடந்த மாதம் அமராவதி அணை நிரம்பியது. மேலும் உபநதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரண மாக ஆற்றில் கடந்த மாதம் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனையடுத்து அணையில் இருந்து நீர்திறப்பு நிறுத்தப்பட்டது. தற்போது அமரா வதி அணையில் நீர்மட்டம் 81அடிக்கு மேல் உள்ளது. இதனால் கரூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறுவை சாகுபடி முன் பணிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். ஒருபோக சாகுபடி யாவது மேற்கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் உள்ளனர். இதே

போன்று கரும்பு விவசாயிகளும் கரும்பு பயிர் நடவு வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

## செட்டிக்குளம் வணிக வளாகத்தில் 40 டன் வெங்காயம் ரூ7.65 லட்சத்துக்கு ஏலம்

பெரம்பலூர், : செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் 40 டன் சின்ன வெங்காயம் ரூ. 7.65 லட்சத்திற்கு ஏலம் மூலம் விற்பனை ஆனது என கலெக்டர் தெரிவித்துள்ளார். பெரம்பலூர் கலெக்டர் தரேஸ்அகமது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுகா, செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலம் கடந்த 16ம் தேதி திறந்தமுறை ஏலம் நடத்தப்பட்டது. இதில் துறையூர் அருகேயுள்ள செங்காட்டுப்பட்டி, லாடபுரம், நக்கசேலம், மங்கூன், செட்டிகுளம், நாட்டார்மங்கலம், சிறுவயலூர், கூத்தனூர், சத்திரமனை, பொம்மனப்பாடி, சிறுவாச்சூர், மாவலிங்கை, அம்மாபாளையம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 127 விவசாயிகள் சின்னவெங்காயத்தினை திறந்தமுறை ஏலத்திற்கு கொண்டுவந்து விற்பனை செய்தனர். திண்டுக்கல், திருச்சி, அரியலூர், செட்டிக்குளம், சத்திரமனை, பொம்மனப்பாடி பாடாலூர், இரூர், சிறுவயலூர், புதூர் ஆகியப் பகுதிகளைச் சேர்ந்த 18 வியாபாரிகள் 519 மூட்டை அளவுள்ள 40,009 கிலோ வெங்காயத்தை ஏலத்தில் எடுத்தனர். அதில், சின்னவெங்காயம் அதிகபட்சமாக கிலோ ரூ. 42க்கும் சராசரியாக ஒரு கிலோ ரூ. 20க்கும் விற்பனையானது. இதன்மூலம் ரூ. 7,65,729க்கு விற்பனை நடைபெற்றது. அனைத்து விவசாயிகளுக்கும் பணம் உடனடியாக வழங்கப்பட்டது.செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் திறந்த முறை ஏலம் நடைபெற்று வருகிறது. எனவே விவசாயிகள்

தங்களது வெங்காய விளைபொருளை நன்கு சுத்தப்படுத்தி, தரம்பிரித்து செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கொண்டுவந்து விற்பனை செய்து பயன்பெற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## <u>முத்துப்பேட்டையில் பலத்த மழை</u>

முத்துப்பேட்டை, : முத்துப்பேட்டை பகுதி யில் நேற்று காலை முதல் இரவு வரை தொடர்ந்து மழை பெய்ததால் பஸ்நிலையம் மற்றும் தெருக்கள் வெறிச்சோடி காணப்பட்டது. திருவாரூர் மாவட் டம், முத்துப்பேட்டை மற்றும் அதன் சுற்றுப் பகுதி கிராமங்களில் நேற்று காலை 10 மணி முதல் இரவு வரை தொட ர்ந்து இடைவிடாமல் மழை பெய்தது. இதனால் முத்துப்பேட்டையில் பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்களில் பயணிகள் கூட்டம் இல் லாமல் வெறிச் சோடி யது. அதேபோல் எப் போதும் மக்கள் கூட் டம் அதிகஅளவில் காணப் படும் குமரன்பஜார், நியுபஜார், திருத்துறைப்பூண்டி சாலை மற் றும் ஆசாத்நகர் போன்ற பகுதிகள் மக் கள் நடமாட்டம் இல் லாமல் வெறிச்சோடி காணப்பட்டது. மாணவ, மாண விகள் மழையில் நனைந்தபடி பள்ளிகளுக்கு சென்றனர்.

## <u>தேவதானப்பட்டி பகுதியில் சாகுபடி குறைவால் கடலை விலை உயர்வு</u>

தேவதானப்பட்டி, : தேவதானப்பட்டி பகுதியில் கடலை சாகுபடியின் பரப் பளவு குறைந்ததால் அதன் விலை உயர்ந்துள்ளது. தேவதானப்பட்டி, மஞ்சளாறு பகுதி, கோம்பை, காமக்காபட்டி, கதிரப்பன்பட்டி, வாடிப்பட்டி, போன்ற பகுதியில் ஆண்டு தோறும் சுமார் 1500 ஏக்கர் மானாவாரி நிலத்தில் கடலை சாகுபடி செய்வது வழக்கம். இந்தாண்டு பருவமழை தாமதமாக பெய்ததால் கடலை சாகுபடி நிலங்களில் எள் சாகுபடி அதிகளவில் இருந் தது. ஆனால் கடலை சாகு படி 500 ஏக்கர் என குறைந் தது. தற்போது நிலத்தில் உள்ள கடலையை விவசாயி கள் அறுவடை செய்து தாங்களே படி கணக்கில் விற்பனை செய்து வருகின்றனர். நல்ல விலை கிடைப்பதால் வியாபாரிகளிடம்

கொடுக்காமல் ஒரு சில விவசாயிகள் மார்க்கெட்டில் அவர்களே விற்பனை செய்கின்றனர். ஒரு படி கடலை ரூ.35 வரை விற்பனை யாகிறது. இந்த பகுதியில் சாகுபடி குறைவால் விற்பனை கூடுதலாக உள்ளது.

**<u>நிலக்கடலையில் மகசூல்</u>**

ராமநாதபுரம், : ராமநாதபுரம் மாவட்டத்தில் பெய்த பருவமழையால் இப்பகுதியில் உள்ள விவசாய கிண றுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. மாவட்டத்தில் நிலக்கடலை பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது குறித்து வேளாண்மைத்துறை சார்பில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ஏக்கருக்கு 80 கிலோ விதை கடலையினை ரைசோபியம் உயிர் உரம் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். மேலும் அடியுரமாக ஏக்கருக்கு 5 கிலோ நிலக்கடலை நுண் ணுரம், யூரியா 15 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 87 கிலோ, பொட்டாஷ் 35 கிலோ இட வேண்டும். கடலை விதைத்த 40 - 45ம் நாள் ஏக்கருக்கு ஜிப்சம் 90 கிலோ இட்டு மண் அணைக்க வேண்டும். இவ்வாறு செய்தால் காய்கள் பொக்கின்றி திரட்சியாக கிடைக்கும். கடலை வயல் பாத்தி வரப்புகளில் குறுகிய கால துவரையினை சாகுபடி செய்யலாம். வரப்பு பயிராக துவரை ஏக்கருக்கு 250 கிலோ முதல் 300 கிலோ வரை மகசூல் கொடுக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>நிலக்கடலையில் களையெடுக்கும் பணி தீவிரம்</u>**

ராமநாதபுரம், : திருப்புல்லாணி வட்டாரத்தில் நிலக்கடலையில் களை எடுக்கும் பணி தீவிரமடைந்துள்ளது. திருப்புல்லாணி வட்டாரம் மணற்பாங்கான பகுதி என்பதால் இப்பகுதியில் அதிகளவில் நிலக்கடலை மற்றும் பயறுவகைகள் விவசாயம் செய்யப்படுகிறது. இப்பகுதியில் தற் போது வடகிழக்கு பருவ நன்கு மழை பெய்துள்ளது. நிலையில் இப்பகுதி விவசாயிகள் நிலக்கடலை செடிகளை பயிரிட்டுள்ளனர். நிலக்கடலை

செடிகள் நன்கு வளர்ந்துள்ளன. இதனையடுத்து செடிகளில் களை எடுக்கும் பணி தீவிரமடைந்துள்ளது. வண்ணாங்குண்டு கிராமத்தில் தென்னந் தோப்புகளுக்கு இடை யே பயிரிடப்பட்டுள்ள நிலக்கடலை செடிகளில் களை எடுக்கும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>சர்க்கார்பதியில் இருந்து கேரளாவுக்கு தண்ணீர் திறப்பு வகறையாறு, உப்பாற்றில் வெள்ளப்பெருக்கு</u>



சர்க்கார்பதியில் இருந்து கேரளாவுக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் வகறையாறு, உப்பாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

பி.ஏ.பி.திட்டம்

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் (பி.ஏ.பி.) முக்கிய அணைகளாக ஆழியாறு, பரம்பிக்குளம் அணைகள் உள்ளன. இந்த திட்டத்தின் கீழ் பழைய ஆயக்கட்டு, புதிய ஆயக்கட்டு, திருமூர்த்தி அணை, கேரள மாநில பாசனம் மற்றும் லட்சக் கணக்கான மக்களின் குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. பரம்பிக்குளம் அணையில் இருந்து திறக்கப் படும் தண்ணீர் சர்க்கார்பதி யில் நீர் மின் உற்பத்தி செய்யப் பட்டு, காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு கொண்டு செல்லப் படுகிறது. தென் மேற்கு மற்றும் வடக்கு கிழக்கு பருவ மழையினால் கிடைக்கும் தண்ணீர் மூலம் அணைகள் நிரம்பி வருகின் றன. பின்னர் அதில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டு, விவ சாயத்துக்கும், பொது மக்களின் குடிநீர் தேவைக்கும் பயன்படுத்தப்படுகிறது.

வெள்ளப்பெருக்கு

இந்த நிலையில் சர்க்கார் பதி பகுதியில் கடந்த வாரம் திடீரென்று பலத்த மழை பெய்தது. இந்த மழையினால் ஆனைமலை பகுதியில் ஓடும் வகறையாறு மற்றும் உப்பாற்றில் கடுமையான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதனால் கரையோர பகுதிகளில் பெரும் சேதம் ஏற்பட்டது. இந்த நிலையில் கேரள மாநிலத்திற்கு பி.ஏ.பி. திட்டத் தின் கீழ் வழங்க வேண்டிய தண்ணீர் சர்க்கார்பதியில் இருந்து வகறையாற்றில் கடந்த 16-ந் தேதி முதல் திறந்து விடப் பட் டுள்ளது. இதனால் வகறை யாறு மற்றும் உப்பாற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. இதன் காரணமாக கரையோர பகுதியில் உள்ள மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள் ளது. மேலும் வெள்ளம் ஓடுவதால் வேட்டைக்காரன் புதூர் அழுக்குசாமி சித்தர் கோவில் அருகே உள்ள தரைப்பாலம், ஆனைமலை மாசாணியம்மன் கோவில் அருகே உள்ள தரைப்பாலம் ஆகியவை தண்ணீரில் மூழ்கி உள்ளன. இதனால் அந்த பகுதி மக்கள் பாதிக்கப் பட்டுள்ளனர். இன்னும் 2 நாட்களுக்கு திறக்கப்படும்

இது குறித்து பொதுப்பணித் துறையினர் கூறியதாவது:-

கேரளமாநில நீர்ப்பாசனத் திற்கு வழங்க வேண்டிய தண்ணீர் சர்க்கார்பதி நீர்மின் நிலையத்தில் இருந்து வினா டிக்கு 200 கன அடி வீதம் வகறையாற்றில் திறந்து விடப் பட்டுள்ளது. வகறை யாற்று தண்ணீர் உப்பாற்றில் கலப்ப தால் வகறையாறு, உப்பாற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட் டுள்ளது. தண்ணீர் திறந்து விடப்பட்டது குறித்து கரை யோர மக்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டுள் ளது. இன்னும் 2 நாட்களுக்கு இதே அளவு தண்ணீர் திறக்கப் பட உள்ளது.இவ்வாறு அவர்கள் கூறி னார்கள்.

**<u>மாவட்டம் முழுவதும் பரவலாக மழை அதிகபட்சமாக புவனகிரியில் 75 மில்லி மீட்டர் பதிவு</u>**



கடலூர் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. இதில் அதிகபட்சமாக புவனகிரியில் 75 மில்லி மீட்டர் பதிவாகியுள்ளது.

கனமழை

வங்கக்கடலில் அந்தமான் அருகே நிலைகொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக கடலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கன மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் காலை தொடங்கிய மழை மாலை வரை பெய்து கொண்டே இருந்தது. சில நேரங்களில் சாரலாகவும், சில நேரத்தில் கன மழையாகவும் கொட்டி தீர்த்தது. இந்த மழையினால் முக்கிய சாலைகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான இடங்களான கடலூர் அண்ணா விளையாட்டு மைதானம், மஞ்சக்குப்பம் மைதானம், சில்வர் பீச்சில் உள்ள விளையாட்டு பூங்கா மற்றும் குடியிருப்பு பகுதிகளில் மழை வெள்ளம் குட்டைபோல்தேங்கிநின்றது.

சாரல்மழை

அதேபோல் நேற்று இரவிலும் விட்டு, விட்டு மழை பெய்தது. இந்த மழை அதிகாலை வரை நீடித்தது. அதன்பிறகு காலை 7 மணிக்கு பிறகு மழை இல்லை. பின்னர் மதியம் 1 மணி அளவில் லேசான சாரல் மழை பெய்தது. இதேபோல் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், பரங்கிப்பேட்டை, ஸ்ரீமுஷ்ணம், விருத்தாசலம், பண்ருட்டி, கொத்தவாச்சேரி உள்பட பல்வேறு இடங்களிலும் மழை பெய்தது. மாவட்டத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக புவனகிரியில் 75 மில்லி மீட்டர் மழையும், குறைந்தபட்சமாக வேப்பூரில் 5 மில்லி மீட்டர் மழையும் பதிவாகியது.

மழைஅளவு

மாவட்டம் முழுவதும் சராசரியாக 26.73 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. மாவட்டத்தில் பிற இடங்களில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில்விவரம்வருமாறு:-

காட்டுமன்னார்கோவில்-66

லால்பேட்டை-62

சிதம்பரம்-60.40

பரங்கிப்பேட்டை-44

கடலூர்-35.70

அண்ணாமலைநகர்-33.40

சேத்தியாத்தோப்பு-32

கொத்தவாச்சேரி-31

ஸ்ரீமுஷ்ணம்-30

வானமாதேவி-21.60

தொழுதூர்-13

மே.மாத்தூர்-10

லக்கூர்-8.40

பெலாந்துறை-8

பண்ருட்டி-7

விருத்தாசலம்-6.40

குப்பநத்தம்-6.40

காட்டுமயிலூர் - 6

## 3-வது நாளாக தொடர்கிறது: தஞ்சை மாவட்டத்தில் விடிய, விடிய மழை



தஞ்சை மாவட்டத்தில் நேற்று விடிய, விடிய மழை பெய்தது. 3-வது நாளாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. வடகிழக்குபருவமழை

தமிழகத்தில் தற்போது வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. வடகிழக்கு பருவமழை முன்கூட்டியே தொடங்கிய போதிலும் ஒரு சில மாவட்டங்களில் இன்னும் போதிய அளவு மழை பெய்யவில்லை.

இருப்பினும் இன்னும் ஒரு சில இடங்களில் மழை பெய்து வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக மழை பெய்தது. நேற்று முன்தினம் பகல் முழுவதும் மழை தூறிக்கொண்ட இருந்தது. மாலை நேரத்தில் மழை இன்றி காணப்பட்டது. பின்னர் இரவு முதல் விடிய, விடியமழைபெய்தது.

3-வதுநாள்

நேற்று 3-வது நாளாக மழை பெய்தது. காலையில் மழை இன்றி வானம் மேகமூட்டத்துடன் காட்சி அளித்தது. இந்த நிலையில் மதியத்துக்கு பிறகு மீண்டும் மழை பெய்ய தொடங்கியது. தொடர்ந்து விட்டு, விட்டு மழை பெய்து கொண்டே இருந்தது. இதே போல் தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மழை பெய்து கொண்டே இருந்தது. மழை இடைவிடாமல் பெய்து கொண்டே இருந்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. தஞ்சையில் தாழ்வான பகுதிகளில் மழைநீர் அதிகஅளவில்தேங்கியது.

மழைஅளவு

தஞ்சை மாவட்டத்தில் தற்போது விவசாயிகள் சம்பா, தாளடி சாகுபடி பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் மழை பெய்து வருவது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. தஞ்சை மாவட்டத்தில் பெய்தமழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:- கல்லணை 11.4, திருக்காட்டுப்பள்ளி 16.2, திருவையாறு 2.6, தஞ்சாவூர் 43, அய்யம்பேட்டை 48, பாபநாசம் 30, கும்பகோணம் 28, அணைக் கரை 25.8, மஞ்சளாறு 49.4, நெய்வாசல் தென்பாதி 47.2, திருவிடைமருதூர் 32, அதிராம்பட்டினம் 84.4, பூதலூர் 18.4, வெட்டிக்காடு 36.4, பேராவூரணி 72, ஒரத்தநாடு 25.6, மதுக்கூர் 62.6, பட்டுக்கோட்டை 44, ஈச்சன்விடுதி 14.4, குருங்குளம் 31, வல்லம் 43.

**<u>“விவசாய பணிகளுக்கு தட்டுப்பாடு இல்லாமல் உரம் கிடைக்க நடவடிக்கை” குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் ம.ரவிகுமார் தகவல்</u>**



“விவசாயத்துக்கு தேவையான உரங்கள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது“ என்று தூத்துக்குடியில் நேற்று நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் ம.ரவிகுமார் தெரிவித்தார்.

குறைதீர்க்கும்கூட்டம்

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நேற்று நடந்தது. கலெக்டர் ம.ரவிகுமார் தலைமை தாங்கினார். வேளாண்மை இணை இயக்குனர் தட்சிணமூர்த்தி, மாவட்ட வருவாய் அலுவலார் முத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தை கலெக்டர் ம.ரவிகுமார், தொடங்கி வைத்து பேசியதாவது:– தூத்துக்குடி மாவட்டத்தில் மழை நன்றாக பெய்துள்ளது. 10 ஆண்டுகளுக்கு பிறகு மழை போதிய அளவு பெய்து இருக்கிறது. பாபநாசம் அணை நீர்மட்டம் 142 அடியாகவும், மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 112 அடியாகவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 145 அடியாகவும் உள்ளது. இது தவிர அணைகளில் இருந்து தாமிரபரணியில் உபரிநீர் வெளியேற்றப்படுகிறது. குளங்களும் நிரம்பி உள்ளன. தூத்துக்குடி மாவட்டத்தில் 45 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் விவசாய பணிகள்நடைபெற்றுவருகின்றன.

யூரியாஉரம்

இதுவரை 9 ஆயிரத்து 600 மெட்ரிக் டன் யூரியா உரம் வந்துள்ளது. இந்த உரங்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இன்னும் சில நாட்களில் 1,600 மெட்ரிக் டன் யூரியா

நெல்லைக்கு வருகிறது. தேவையான உரங்களை கேட்டு வாங்கலாம். கூடுதலாக கூட உரங்கள் வாங்கலாம். பெரும்பாலான உர மூடைகள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளன. சில தனியார் உரக்கடைகளில் அரசு நிர்ணயித்த விலை ரூ.270.50 விட கூடுதலாக விற்பனை செய்வதாக புகார் வந்தது. அதன் அடிப்படையில் அதிகாரிகள் ஆய்வு செய்தனர். விலை கூடுதலாக உரங்களை விற்பனை செய்த 9 கடைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. சிறப்புஅங்காடிகள்

மேலும் 6 இடங்களில் சிறப்பு அங்காடிகள் அமைக்கப்பட்டு உள்ளன. அங்கு 25 டன் உரம் கையிருப்பு வைக்கப்பட்டு உள்ளது. விவசாய பணிகளுக்கு உரங்கள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு உரங்கள் கிடைக்கவில்லை என்றால், எனக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பலாம். அந்த தகவலை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கச் சொல்வேன்.ரூ.100கோடி

வேளாண்மை பயிர் காப்பீட்டு திட்டத்தில் நமது மாவட்டத்துக்கு ரூ.100 கோடி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. மக்காச்சோளம், கம்பு, பாசிப்பயிறு உள்ளிட்ட பயிர்களின் சேத மதிப்பை தயார் செய்து அனுப்பினோம். தற்போது 47 ஆயிரத்து 862 விவசாயிகளுக்கு, 66 ஆயிரத்து 196 எக்டேர் பாதிப்புக்கு இழப்பீடு வந்துள்ளது. இந்த இழப்பீட்டு தொகைக்கு எப்படி விண்ணப்பிக்க வேண்டும் என அதிகாரிகளிடம் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.கருவேலமரங்கள்

தூத்துக்குடி மாவட்டத்தில் கருவேல மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 403 பஞ்சாயத்துகளிலும் அதிகாரிகள் ஆய்வு செய்து அறிக்கை தயார் செய்துள்ளனர். இந்த மரங்கள் பொது ஏலமிட்டு அகற்றப்படும். அகற்றப்பட்ட மரங்களுக்கு பதிலாக மரக்கன்றுகள் நடுவதற்கு திட்டமிடப்பட்டு உள்ளது. 17 லட்சம் மரக்கன்றுகள் மாவட்ட

நிர்வாகம் சார்பில் நடுவதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. சமீபத்தில் பெய்த தொடர் மழையால் 10 பேர் உயிர் இழந்து உள்ளனர். கால்நடை களும் பலியாகி உள்ளன. 539 குடிசை வீடுகள் இடிந்துள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு சார்பில் நிவாரணம் வழங்கப்பட்டு உள்ளது. இவ்வாறு கலெக்டர் ம.ரவிகுமார் பேசினார். இதைதொடர்ந்து விவாதம்நடந்தது.

தடுப்பணை

விவசாயிகள்:– மழைக்காலங்களில் தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, உபரிநீர் கடலில் கலக்கிறது. பெரிய அளவு தடுப்பணை கட்டி தண்ணீரை சேமிக்க வேண்டும். கலெக்டர்:– இது தொடர்பாக கடந்த 11–ந் தேதி திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்குஅனுப்பிஉள்ளோம்.

விவசாயிகள்:– ஏரல் பாலம் கட்டப்பட்டு திறக்கப்படாமல் உள்ளது. அதை திறக்கநடவடிக்கைஎடுக்கவேண்டும்.

கலெக்டர்:– அந்த பாலம் ஏன் திறக்கப்படவில்லை என்று உங்களுக்கு தெரியும். இது பற்றி அரசின் கவனத்துக்கு கொண்டு செல்வோம். விவசாயிகள்:– சமீபத்தில் பெய்த மழையால் சாலைகள் குண்டும், குழியுமாக காட்சி அளிக்கிறது. இதை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.முழுமையாக சீரமைக்கப்படும்.

கலெக்டர்:– வெள்ளசேத மதிப்பீடு ரூ.9 கோடி என கணக்கிடப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. இதில் ரூ.50 லட்சம் அரசு ஒதுக்கி உள்ளது. அந்த நிதி மூலம் சாலைகள் சரி செய்யப்பட்டு வருகின்றன. மீதம் நிதி வந்தவுடன் முழுமையாக சாலைகள் சீரமைக்கப்படும். விவசாயிகள்:– விவசாய பட்டாக்கள் மாற்றுவதில் அதிகாரிகள் காலதாமதம் செய்கிறார்கள். விரைந்து மாற்றி கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கலெக்டர்:– ஜமாபந்தியில் கொண்டு வாருங்கள். அனைத்து

பட்டாக்களும்மாற்றிதரப்படும்.

வாழைகள்சேதம்

கூட்டத்தில் திடீரென்று விவசாயிகள் சிலர் எழுந்து, மழையால் சேதம் அடைந்த வாழைகளை கலெக்டரிடம் காண்பித்தனர். வாழை தோட்டங்களில் மழை வெள்ளம் சூழ்ந்து நிற்கிறது. அதனால் வாழைகள் அழுகி விட்டன. இதற்கு கூடுதல் இழப்பீடு பெற்றுத்தர வேண்டும், என்றனர். இதை கேட்ட கலெக்டர், அதிகாரிகள் மூலம் கணக்கெடுத்து அரசுக்கு அனுப்புவோம், என்றார். இவ்வாறு கூட்டத்தில் விவாதம் நடந் தது.

**<u>மானிய விலையில் விவசாயிகளுக்கு எந்திரங்கள் வழங்க ரூ.59 லட்சம் நிதி ஒதுக்கீடு கலெக்டர் தகவல்</u>**



வேலூர், வேலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் எந்திரங்கள் வழங்க ரூ.59 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று கலெக்டர் நந்தகோபால் தெரிவித்துள்ளார்.இது குறித்து கலெக்டர் நந்தகோபால் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

நிதிஒதுக்கீடு

நவீன வேளாண்மையில், நவீன உக்திகளை கையாளுவதற்கு, விதைப்பு முதல் அறுவடை வரை தேவையான பல்வேறு எந்திரங்களை மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்க இந்த ஆண்டில் வேலூர் மாவட்டத்துக்கு ரூ.58 லட்சத்து 96 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இதன்மூலம் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின உழவர்களுக்கும், இதர உழவர்களுக்கும் மானிய விலையில் பல்வேறு எந்திரங்களான நெற்பயிருக்கு தேவையான நாற்றுவிடும் கருவி, களை எடுக்கும் கருவி, அறுவடை செய்யும் கருவி, நேரடி விதைப்பு உருளை

போன்றவைகளுடன், நிலத்தினை உழவு செய்ய பவர்டில்லர், சுழல் கலப்பை, தீவனம் நறுக்கும் கருவி போன்ற நவீன கருவிகள் வழங்கப்பட உள்ளன. தொடர்பு கொள்ளலாம். இதில் பயன் அடைய விரும்பும் உழவர்கள், மாவட்ட அளவிலான செயற் பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை அலுவலகத்தையோ அல்லது உதவி செயற் பொறியாளர் அலுவலகங்களான வாலாஜா, திருப்பத்தூர், வேலூர் ஆகிய பகுதிகளில் உள்ள அலுவலகங்களை தொடர்பு கொண்டு, தங்களின் புகைப்படம் உள்ள விண்ணப்பங்களுடன் சிட்டா, அடங்கல் மற்றும் ரேசன் அட்டை நகலுடன் இணைத்து விண்ணப்பிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.